Original Suit No. 181/2022 நாள்:01.04.2024

**வா.சா.1 பானுமதி அவர்களின் குறுக்கு விசாரணை**

பாகப்பிரிவினை கேட்டு வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என் கணவர் பெயர் நகுல்சாமி. அவர் நிலபுரோக்கர் வேலை செய்யவில்லை. விவசாயம் செய்கிறார். என் மகனும் விவசாயம் செய்கிறார். வழக்கு விபரங்களை என் கணவர் தான் சொன்னார். வழக்கு சொத்தின் சர்வே எண். 175, அது 4 ஏக்கர் 40 செண்ட் அளவுள்ள நிலம். அதன் எல்லைகளை பொருத்து சரியாக நினைவில்லை. பிரதிவாதிகளை தெரியும். அவர்கள் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். முத்துலட்சுமியின் கணவர் பெயர் நினைவில்லை. சந்தானம்மாள் வீட்டுக்காரரின் பெயர் பழனிச்சாமி. அவருக்கு 3 மகள்கள் உள்ளனர். அவர்கள் பெயர் டெய்சிராணி, கனிமுத்து, கோமதி செல்வி ஆகும். அவர்கள் எல்லாம் ஒன்றாக தான் இருக்கிறார்கள். டெய்சிராணிக்கு திருமணம் ஆகி கணவருடன் இருக்கிறார். வழக்கு சொத்துக்களில் 2 ஏக்கர் 20 செண்ட் நிலத்தை மருதமுத்து வாரிசுகளிடம் இருந்து நாங்கள் கிரையம் வாங்கி இருக்கிறோம். நாங்கள் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய தொகை எவ்வளவு என்று நினைவில்லை. அதற்கு முன்பு ஒப்பந்தம் போடவில்லை. வில்லங்கசான்று பார்த்தோம். அதை தாக்கல் செய்யவில்லை. கிரையம் வாங்கிய அன்று பணம் கொடுக்கப்பட்டது. அது 30.03.2021 என்றால் சரிதான். பணமாக கொடுத்தோம். எந்த வகையான நோட்டுக்கள் என்று நினைவில்லை. வெள்ளியணை சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பதிவு செய்யப்பட்டது. அதை யார் எழுதினார்கள் என்று பெயர் தெரியாது. அது வெள்ளியணை பத்திர அலுவலகத்தில் எழுதப்பட்டது. அது சாட்சி போட்டவர்கள் யார் என்று தெரியாது. மதியம் 3 மணிக்கு பத்திர அலுவலகம் சென்றோம். பத்திரம் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்று நியாபகம் இல்லை. பத்திர பேப்பர் எவ்வளவு வாங்கியது என்பது தெரியாது. என் கணவர் தான் வாங்கினார். பதிவு அலுவலகத்தில் பணம் கட்டப்பட்டதா என்பது தெரியாது. கிரைய பத்திரத்தின் அசல் என்னிடம் தான் இருக்கிறது. பத்திர அலுவலகத்திற்கு நான் உட்பட என் மகன் வந்தார் வேறு யார் வந்தார் என்று தெரியாது. தற்போது நினைவில்லை. நான் சொல்வது போல A7

ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் ஆவணம் பெயரளவு ஆவணம் என்றால் சரியல்ல. A7 ஆவணம் என் கணவர் நில புரோக்கராக இருப்பதால் பெரியசாமி வகையறாவில் கூட்டு சேர்ந்து கொண்டு ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதிகளுடன் நாங்களும் கூட்டாக அனுபவித்து வருகிறோம். அதனால் தான் வழக்கு போட்டிருக்கிறோம். வழக்கு சொத்தை நாங்கள் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பெரியசாமி வகையறாவிற்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. அதற்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.04.01 18:30:49 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.